# தமிழ் மொழித் தினப் போட்டிக் கூத்துக்கள்

(மட்டக்களப்புப் பிரதேசத்தின் வடமோடி,தென்மோடிக் கூத்துக்களை மையப்படுத்திய ஆய்வு)

LIBRARY
AUG 2012
Eastern University, Sri Lanka.

திரு. யோகராசா நிசந்தராசன்
பதிவிலக்கம் EU/IS/2004/AC/182
சுட்டெண் CS 2492

FAC56
Project Report
Library - EUSL

நுண் கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்
இலங்கை

2011

PROCESSED
Main Library, EUSL
56

# முன்னுரை

## 1. ஆய்வு அறிமுகம் :

ஈழம் வாழ் தமிழ் மக்களிடையே உயிர்த்துடிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் கலை கூத்து. கூத்துக்கள் ஆடப்படும் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் பல பெயர்களால் அழைக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற அதே நேரம் இதன் ஆற்றுகைத் தளமாக வட்டக்களரி காணப்படுகின்றது. இருப்பினும் பாரம்பரியத்திற்கு எதிரான நோக்கில் தமிழ் மொழித்தினப்போட்டிகளில் கூத்துக்கள் என அழைக்கப்பட்டு ஆடப்படும் தன்மை காணப்படுகின்றது. இப்பாடசாலை தமிழ் மொழித்தினக் கூத்துக்களையே சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கூத்துக்களாக காட்டி வருவதும், மாணவர்கள் அதனையே கூத்தாக எண்ணி வருகின்றனர். இந்நிலையில் கூத்துக்களின் தன்மை, அதன் அழகியல், அரசியல், பொருளாதாரம், தத்துவம், சமூகப்பின்புலம் என பல்வகைப்பட்ட பன்முகப் பார்வையில் கூத்துக்களை விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை இன்றைய சூழலில் எழுந்துள்ளது. இந் நோக்கில் பாரம்பரிய கூத்துக்களை தமிழ் மொழித்தினக்கூத்துக்கள் எந்த விதத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பதையே இவ் ஆய்வு எடுத்துக்கொள்கின்றது.

சூழலில் பரிச்சயமில்லாத நவீன சூழலால் வடிவமைக்கப்படும் சந்ததியினர் மத்தியில் கூத்து என்பது படச்சட்ட மேடையில் ஆடுவதே என 1960களினைத் தொடர்ந்து மெல்ல மெல்ல அரும்பி வந்துள்ளது. குறிப்பாக நகர்ப்புறத்தில் வாழ்கின்ற கூத்தில் பரிச்சயமில்லாதவர் மத்தியில் இந் நிலை உருவாகியுள்ளது. இது இவ்வாறிருக்க, இன்னொரு புறம் ஊர்களிலே கூத்துக்கள் அதன் பாரம்பரிய தன்மைகளோடு ஆடப்பட்டுக் கொண்டு வருகின்றன. இந் நிலையில் கூத்தினுடைய உண்மைத் தன்மையினை வெளிப்படுத்த வேண்டிய தேவை எம் மத்தியில் உருவாகியுள்ளது. இதிலிருந்து தமிழ் மொழித்தினப் போட்டிக் கூத்துக்கள் என்பது பாரம்பரிய ஊர்க்கூத்துக்களில் இருந்து வேறுபட்டது என்பதனை வேறுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. இதனால் யதார்த்தமான கூத்தரங்குகளில் இருந்து தமிழ் மொழித்தினப்போட்டிக்கூத்துக்கள் வேறுபட்டன. இதனைக் கூத்துக்கள் என்று சொல்ல முடியாது என்பதனைக் காரணமாகக் கொண்டே இவ்விடயம் ஆய்வுக் குட்படுத்தப்படுகின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | உறுதியுரை ................................................. | I-II |
| | நன்றியுரை ................................................ | III |
| | முன்னுரை ................................................ | IV-VI |
| 01. | அத்தியாயம்- ஒன்று<br>ஈழத்து தமிழர் கூத்துக்கள் ஓர் அறிமுகம்.................. | 01-22 |
| 02. | அத்தியாயம்- இரண்டு<br>மட்டக்களப்பில் படச்சட்ட மேடையின் அறிமுகமும்,<br>அதனைப்பின் பற்றி கூத்துக்கள் வளர்ந்த விதமும்........... | 23- 32 |
| 03. | அத்தியாயம்- மூன்று<br>தமிழ்மொழித் தினப்போட்டிகள் பற்றிய அறிமுகமும்,<br>அதில் ஆடப்படும் கூத்துக்களும்,அவற்றிற்கான<br>விதிமுறைகளும்.................................................... | 33-52 |
| 04. | அத்தியாயம்- நான்கு<br>பாரம்பரியக்கூத்துக்களுக்கும்,தமிழ்மொழித்தினப்போட்டிக் கூத்துகளுக்குமான<br>வேறுபாடு.......................................... | 53-63 |
| | முடிவுரை:................................................ | 64-65 |
| | துணை நூல் பட்டியல்:.................................... | 66-68 |
| | பின்னிணைப்பு:.............................................. | 69-70 |